நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

# C.C. No. 363/2025

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மணியன் |
| கிராமம் | : | மணிவிழுந்தான் வடக்கு |
| வட்டம் | : | தலைவாசல் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 45 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025-ஆம் வருடம், நவம்பர் மாதம், 11-ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 04.15 PM

1. நான் தற்போது கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2024 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சேலம் மாவட்டம், கொளத்தூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா என்பவர் நிலைய அலுவலில்

இருந்தபோது, சித்தன்(60), த.பெ. சின்னப்ப கவுண்டர் என்பவரது விபத்து இண்டிமேசன் படி பெண் தலைமை காவலர் 1630 திருமதி. கிருஷ்ணவேணி என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சித்தன் என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று வந்து ஆஜர் செய்ததின் பேரில் கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.119/2024, ச.பி. 279, 337 IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார்.

2. முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து, இவ்வழக்கினை முதல்கட்ட புலன்விசாரணை மேற்கொண்டுள்ளார். 02.04.2024 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஈஸ்வரன் மற்றும் சிங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார்.

3. சம்பவயிட சாட்சிகளான சித்தன், கந்தசாமி, வெண்ணிலா, பிரியங்கா, சிங்கமுத்து, ஈஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 36 AP 3242 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த லோகநாயகி க.பெ.தமிழ்செல்வன் என்பவரை சித்திரைப்பட்டி 4 ரோட்டில் வைத்து 25.04.2024 ம் தேதி மதியம் 14.00 மணிக்கு கைதுசெய்து பின்னிட்டு இருநபர் ஜாமினீல் விடுவித்துள்ளார்.

4. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 36 AP 3242 என்ற பதிவெண் கொண்ட ஸ்கூட்டி இருச்சக்கர வாகனத்தை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன தணிக்கைக்காக அனுப்பியுள்ளார். பின்னிட்டு இவ்வழக்கு கோப்பை 13.05.2024 ம் தேதி எனது மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். மேற்படி வழக்கு கோப்பை பெற்று இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டும், சாட்சிகளை விசாரணை செய்தபோதும் முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்னதையே என்னிடம் சாட்சிகள் சாட்சியம் அளித்ததால் அவர்களிடம் தனியாக வாக்குமூலம் எதுவும்

பதிவுசெய்யவில்லை.

5. பின்னிட்டு இவ்வழக்கில் காயம்பட்ட வாதி சித்தன் என்பவருக்கு மருத்துவ சிகிச்சையளித்த டாக்டர் M. பிரசாத் அவர்களை விசாரித்தும், காயச்சான்றிதழ் பெற்றும் வாக்குமூலம் பதிவுசெய்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. மீனாகுமாரி அவர்களை விசாரித்தும், மோட்டார் வாகன ஆய்வு சான்றிதழ் பெற்றும் வாக்குமூலம் பதிவுசெய்தேன். **(விபத்து பதிவேட்டு நகல், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5,6 மற்றும் மோட்டார் வாகன ஆய்வுச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

6. பின்னிட்டு இவ்வழக்கில் காயம்பட்ட வாதியிடம் வாக்குமூலம் பெற்றுவந்த தலைமை காவலர் 1630 திருமதி. கிருஷ்ணவேனி மற்றும் இவ்வழக்கை முதல்கட்ட புலன்விசாரணை மேற்கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜா அவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

7. மருத்துவர் அளித்த காயச்சான்றிதழ், மோட்டார் வாகன ஆய்வாளர் அளித்த ஆய்வுச்சான்றிதழ் மற்றும் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டபிரிவை 279, 337 இ.த.ச விலிருந்து 279, 337 இ.த.ச மற்றும் மோட்டார் வாகனச்சட்டப் பிரிவுகள் 196, 181(3), 192(1) ஆகிய சட்டபிரிவுகளின் படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன்.**( சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

8. பின்பு எதிரியின் மீது 279, 337 இ.த.ச மற்றும் மோட்டார் வாகனச்சட்டப் பிரிவுகள் 196, 181(3), 192(1) ஆகிய சட்டபிரிவுகளின் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **(அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் பாரத குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 330 ன் படி கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் சம்மதத்தின் பேரில் சம்மந்தப்பட்ட சாட்சியை விசாரணை செய்யாமல் நேரடியாக குறியீடு செய்யப்பட்டது.)**

**கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—04.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**